**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.</u>**

**<u>O.S.No.343/2015</u>**

**<u>நாள்.27.01.2026</u>**

**<u>பி.வா.சா. 1</u>- மகாராஜன்**

**<u>7 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசார ணை</u>**

தாவா சொத்துக்கள் ஆதியில் வீரபுத்திரத்தேவருக்குப் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வீரபுத்திரத்தேவருக்கு தாவா சொத்துக்கள் தவிர வேறு சொத்துக்கள் என்ன உண்டு என்றால் ஒரு கிணறு மற்றும் அதனுடன் சேர்ந்த 8 ஏக்கர் நிலம் உண்டு, அது போக 4 வீடுகள் உண்டு. மேற்படி கிணறு மற்றும் அதனுடன் சேர்ந்த 8 ஏக்கர் நிலம் எவ்வாறு பிரிக்கப்பட்டது என்றால் எனக்கு விவரம் தெரிவதற்கு முன்பாகவே பிரித்துக்கொண்டார்கள். அவ்வாறு மேற்படி கிணறு மற்றும் அதனுடன் சேர்ந்த 8 ஏக்கர் நிலம் பாகம் பிரிக்கப்பட்டு விற்பனையும் செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். 4 வீடுகள் எவ்வாறு பிரிக்கப்பட்டது என்றால் என் சித்தப்பாவிற்கு 2 வீடும், என் அப்பா கட்டாரித்தேவருக்கு 2 வீடும் என பிரிக்கப்பட்டது. என் அப்பா கட்டாரித்தேவருக்கு 2 மனைவிகள் என்றால் சரிதான். முதல் மனைவி பெயர் முத்தாத்தாள், 2 வது மனைவியின் பெயர் சண்முகத்தாய் என்றால் சரிதான். மேற்படி முத்தாத்தாள் மகள் தான் 1வது பிரதிவாதி அன்னத்தாய் என்றால் சரிதான். நான் 1வது பிரதிவாதி அன்னத்தாய்க்கும் சேர்த்து தான் சாட்சி சொல்கிறேன் என்றால் சரிதான். எங்களுக்கு விடப்பட்ட 2 வீடுகள் தற்போது எப்படி உள்ளது என்றால் காலியிடமாக. 1வது பிரதிவாதி அன்னத்தாய்க்கு கீழ்புறம் சொத்து கொடுத்துள்ளோம் என்றால் சரிதான் வீடாக இருக்கும்போதே கொடுத்துவிட்டோம். 1வது பிரதிவாதி அன்னத்தாய் திருமணம் முடிந்ததில் இருந்து குறுக்கள்பட்டி கிராமத்தில் வசித்துவருகிறார் என்றால் சரிதான். 1வது பிரதிவாதி அன்னத்தாய்க்கு கீழ்புறம் சொத்து கொடுத்து பாகப்பிரிவினை செய்ததற்கு எழுத்து மூலமான ஆவணம் பதிவு செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். எங்களுக்கும், 1வது பிரதிவாதி அன்னத்தாய்க்கும் பாகப்பிரிவினை எந்த வருடம் நடந்தது என்றால் எனக்கு 35 வயது இருக்கும்போது நடந்தது எனக்கு தற்போது 55 வயதிற்கு மேல் இருக்கும்.

முதல் மனைவி மக்கள் மற்றும் 2 வது மனைவி மக்கள் இடையே பாகப்பிரிவினை எழுத்துமூலமாக ஏற்பட்டதில் இருந்து நாங்களும் 1வது பிரதிவாதி அன்னத்தாயும் தனித்தனியாக சொத்துக்களை அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். வாதி செல்வராஜூக்கு குடியிருப்பு என்ன என்றால் கோவில்பட்டி அருகில் உள்ள கிராமம். வாதி செல்வராஜ் கோவில்பட்டிற்கு சென்று எவ்வளவு காலம் இருக்கும் என்றால் நான் கேரளாவிற்கு சென்றுவிட்டதால் எனக்கு அது பற்றி தெரியவில்லை. கிணறு மற்றும் அதனுடன் சேர்ந்த 8 ஏக்கர் நிலம் பாகம் பிரிக்கப்பட்டு கட்டாரித்தேவருக்கு எவ்வளவு இடம் கிடைத்தது என்றால் எவ்வளவு இடம் என குறிப்பிட்டு தெரியாது எனக்குப் படிப்பறிவு இல்லை எங்களிடம் 4-1/2 ஏக்கர் உள்ளது. வாதி செல்வராஜ் வழக்கில் சொல்லிய சொத்து விபரம் தெரியுமா என்றால் கட்டாரித்தேவர் பெயரில் இருந்த சொத்தை பாகம் கேட்டு வழக்குப் போட்டுள்ளார். வாதி செல்வராஜ் வழக்கில் சொல்லிய சொத்தின் நான்கு பக்க எல்கை என்ன என்றால் ரோட்டுக்கு தென்புறம் கட்டாரித்தேவர் இடம் உள்ளது. ரோட்டுக்கு தென்புறம் கட்டாரித்தேவர் தான் அனுபவித்து வந்தார் என்றால் ஆமாம். இந்த வழக்கின் அழைப்பாணை எனக்கு 2015 ல் கிடைத்தது என்றால் ஆமாம் எனது மனைவி கையெழுத்து போட்டு அழைப்பாணை வாங்கினார். நான் அப்போது இந்த வழக்கில் ஆஜராகவில்லை என்றால் நான் கேரளாவில் இருந்ததால் வழக்கில் ஆஜராகவில்லை எனது மனைவிக்கும் அம்மாவிற்கும் படிப்பறிவு கிடையாது. வழக்கு நிலுவையில் உள்ள விபரம் 2025 ல் எனக்கு யார் சொன்னது என்றால் எனது மனைவி சொன்னார். எனது மனைவிக்கு வழக்கு நிலுவையில் உள்ள விபரம் எப்படி தெரியும் யார் சொன்னது என்றால் நானாக தான் வழக்கில் வந்தேன். நான் வாதியின் தூண்டுதலின் பேரில் வழக்கு காலதாமதப்படுத்த வேண்டி முதலில் ஆஜராகாமல் தற்போது ஆஜராகியுள்ளேன் என்றால் சரியல்ல. வாதியின் அப்பாவை பார்த்துள்ளேனா என்றால் நான் பார்த்தது இல்லை என் அப்பா சொல்லி தான் தெரியும். வாதியின் அப்பாவிற்கு பட்டப்பெயர் உள்ள விபரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் பட்டப்பெயர் சொல்லி அழைப்பதாக சொல்வார்கள் அதனால் சொன்னேன்.

நான் சொல்லக்கூடிய ராமர்பாண்டி என்ற பெயர் வாதியின் அப்பாவிற்கு பட்டப்பெயர் கிடையாது நான் வாதிக்காக பொய்யாக பட்டப்பெயர் உள்ளதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் தற்போது பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன் அதில் மக்காச்சோளம் உள்ளது. தாவா சொத்து செம்மண் பூமி என்றால் சரிதான். செம்மண் பூமியில் மக்காச்சோளம் மானாவாரியாக பயிரிட முடியாது என்றால் சரிதான் தண்ணீர் இருந்தால் தான் செய்ய முடியும். தாவா சொத்து செம்மண் பூமிக்கு தண்ணீர் எவ்வாறு செல்கிறது என்றால் 7 வது பிரதிவாதியின் இடத்தில் இருந்து குழாய் பதித்து மோட்டார் மூலமாக தண்ணீர் செல்கிறது. தாவா சொத்து செம்மண் பூமிக்கு 7 வது பிரதிவாதியின் இடத்தில் உள்ள கிணற்றில் இருந்து குழாய் எவ்வளவு தூரம் நிரந்தரமாக பதிக்கப்பட்டுள்ளது என்றால் ½ கி.மீ தூரம் பதிக்கப்பட்டுள்ளது. தாவா சொத்து செம்மண் பூமிக்கு 7 வது பிரதிவாதியின் இடத்தில் உள்ள கிணற்றில் இருந்து குழாய் பதிக்கப்பட்டு எவ்வளவு காலம் இருக்கும் என்றால் எனக்கு 3 வருடமாக தெரியும் அதற்கு முன்பாக எப்போது பதிக்கப்பட்டது என எனக்குத் தெரியாது. தாவா சொத்து செம்மண் பூமிக்கு 7 வது பிரதிவாதியின் இடத்தில் உள்ள கிணற்றில் இருந்து குழாய் பதிக்கப்பட்டுள்ள விபரம் 3 வருடமாக தெரிந்தும் ஏன் இந்த வழக்கில் உடனடியாக ஆஜராகவில்லை என்பதை இந்த வழக்கில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். எங்கள் குடும்பத்தில் நடந்த வாய்மொழி பாகப்பிரிவினையின் படி தபசில் சொத்து 4 மற்றும் 5 பிரதிவாதிகளின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டு அவர்களால் அனுபவிக்கப்பட்டு, வா.சா.ஆ.2 மூலமாக 7 வது பிரதிவாதிக்கு கிரையம் கொடுக்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான் அவர்கள் பங்கை தான் கொடுக்கமுடியும். 2 வது பிரதிவாதி ராமாத்தாள் எனது உடன்பிறந்த சகோதரி என்றால் சரிதான். ராமாத்தாளின் கணவர் பெயர் என்ன என்றால் தங்கபாண்டி ஆயாள்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர். ராமாத்தாளின் கணவர் தங்கபாண்டி வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார் என்றால் சரிதான்.

வா.சா.ஆ.2 கிரைய ஆவணம் குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியும் வாதிக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 பட்டா எங்களுடைய உரிமையை நிரூபிப்பதற்கான ஆவணம் கிடையாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தின்படி 7 வது பிரதிவாதி தான் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. எங்கள் குடும்பத்தில் நடந்த வாய்மொழி பாகப்பிரிவினையை மறைத்து பொய்யாக கட்சி செய்கிறேன் அதனால் எனது கட்சி ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**7 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.01.27 17:39:35 +0530